# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

## 2012 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க நிதிச் சட்டம்

2013 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பகுதி III இன் மூலம் திருத்தியமைக்கப்பட்டவாறான, 2012 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் IV ஆம் பிரிவின் கீழ் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகள்.

**ஒப்பம்: மஹிந்த ராஜபக்ஷ,**

நிதி, பொருளாதாரம் மற்றும்

கொள்கை அபிவிருத்தி அமைச்சர்

நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு,

கொழும்பு 01,

2019, திசெம்பர் மாதம் 05 ஆந் திகதி.

### ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்கு விதிகள், 2019 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் கீழான இலங்கை வர்த்தக மைய ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.
2. திருத்தியமைக்கப்பட்டவாறான, 1978 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட, இலங்கை முதலீட்டுச் சபை, (இதனகத்துப் பின்னர் 'சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்), சட்டத்தின் 17 ஆம் பிரிவிற்கு அமைவாக, சபையானது புதிய தொழில் முயற்சியொன்றுடன் கைச்சாத்திட்டிருக்கும் ஏதேனுமொரு உடன்படிக்கையில் கூட்டிணைக்கப்பட்டிருக்கும் அல்லது சட்டமயப்படுத்தப்பட்டிருக்கும் 1978 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதிய 8/2 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டிருக்கும் 1978 ஆம் ஆண்டின் 01 ஆம் ஒழுங்குவிதிகளிலுள்ள உள்ளடக்கத்திற்கு மேலதிகமாக, 2013 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் மூலம் திருத்தியமைக்கப்பட்டவாறான, 2012 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் (முதன்மைச் சட்டவாக்கம்) பிரிவு IV இல் குறிப்பிடப்பட்டிருக்கும் கீழ்வரும் ஏற்பாடுகள் பயன்வலுப்பெறச் செய்தல்வேண்டும்.

   (1) இலங்கையில் இயங்குகின்ற உரிமம் பெற்ற வணிக வங்கி ஒன்றில் இயக்கப்படுகின்ற ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு நாணய மாற்றுக் கணக்கொன்றிலிருந்தான

ஏதேனும் பண அனுப்பீடுகள் உள்ளடங்கலாக, வெளிநாட்டு நிதி மூலங்களிலிருந்தான மொத்த முதலீட்டின் ஆகக் குறைந்த தொகையான அறுபத்தைந்து சதவீதத்தினை (65%), முதலீடுசெய்து, இலங்கையில் புதிதாகத் தாபிக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் புதிய தொழில் முயற்சியொன்று, பின்வரும் வர்த்தக செயற்பாடுகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட செயற்பாடுகளின் அடிப்படையில் பண்டங்கள் மற்றும் சேவைகள் என்பனவற்றை ஏற்றுமதிசெய்வதன் மூலம் அடையப்பெற்ற மொத்தப் புரள்வினை அடிப்படையாகக் கொண்டு, சுங்கக் கட்டளைச் சட்டம் (235 ஆம் அதிகாரம்) , 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலவாணிச் சட்டம், 1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாடு) சட்டம் மற்றும் 2013 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க நிதிச் சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்டவாறான அதன் முதன்மைச் சட்டவாக்க அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டிருக்கும் சட்டத்தின் ஒழுங்கு விதிகளை அமுலாக்கப்படுவதிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(அ) துறைமுக நுழைவு வியாபாரத்தோடு சம்பந்தப்பட்டுள்ள;

(i) இறக்குமதி, சிறுபதனீடு மற்றும் மீள் ஏற்றுமதி

(ii) முதன்மைச் சட்டவாக்கத்தில் வரையறுக்கப்பட்டுள்ளவாறு குறிப்பீடு செய்யப்பட்டுள்ள பிணைக்குதப் பகுதியில் நிறுவப்பட்டுள்ள ஏற்றுமதிக்கான ஏதேனும் உற்பத்திச் செயற்பாடு;

(ஆ) பண்டங்கள் ஒரு நாட்டிலிருந்து பெறப்பட்டு அல்லது ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டு இலங்கையினுள் அதனைக் கொண்டுவராது வேறு நாட்டிற்கு கப்பலேற்றுகின்ற விடத்தான கரைகடந்த வியாபாரம்;

(இ) வெளிநாட்டு வாடிக்கையாளர்களுக்கான முன்னரங்கு நிறைவு சேவைகளை வழங்கும் செயற்பாடு;

(ஈ) முன்னிலைக் கொள்வனவாளரின் தலைமையகத் தொழிற்பாடுகளில் முகாமைக்கான நிதி விநியோகத் தொடர் மற்றும் பட்டியலிடல் தொழிற்பாடுகள்;

(உ) இலங்கையில் பிணைக்குதம் அல்லது பன்நாட்டு தொகுதிப் பண்டங்களை ஒன்றுசேர்க்குமிடம் போன்றவற்றுக்கான வசதியளிப்புச் சேவைகள்;

மேலும், இவ்வொழுங்கு விதிமுறைகளின் 2 (1) (அ) (ii) இன் கீழ் குறிப்பிடப்பட்ட வியாபாரச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள ஏதேனும் தொழில் முயற்சியொன்று, அதன் பண்டம்/ உற்பத்தி உள்நாட்டுக் கேள்வியின் அறுபத்தைந்து சதவீதத்திற்கு (65%) அதிகமானவற்றை நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படுவதன் மூலம் வழங்கல்செய்யப்படுகின்ற ஒரு பண்டமாக அல்லது ஓர் உற்பத்தியாக இருக்குமிடத்து, அத்தகைய சூழ்நிலைகளில் தேசிய பொருளாதாரத்தின் நலன் மற்றும் அத்தகைய பண்டங்கள்/ உற்பத்திகள் உள்நாட்டுச் சந்தையில் கிடைப்பனவுத் தன்மையின் முக்கியத்துவம் என்பனவற்றைக் கருத்திற்கொண்டு, நிதி என்ற விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் முன் ஒத்திசைவுடன் அமைச்சரவையினால் நீடிப்புச் செய்யப்பட்டாலன்றி, உள்நாட்டு சந்தை அணுகலுக்கான அங்கீகாரம் வழங்கப்பட்ட

நாளிலிருந்து அதிகபட்சம் எட்டு (08) ஆண்டுகளுக்காக, வருடாந்த இணக்க அடிப்படையில், அத்தகைய தொழில்முயற்சியின் வருடாந்த மீள் - ஏற்றுமதிப் புரள்வில் (தொழிற்சாலைக்கு வெளியிலான விலை) அதிகபட்சம் நாற்பது சதவீதம் (40%) வரையில் அத்தகைய பண்டங்கள் / உற்பத்திகளை உள்நாட்டுப் சந்தையில் விற்பனை செய்ய அனுமதிக்கப்படலாம்.

எவ்வாறாயினும், மேற்கூறிய சலுகையின் கீழான உள்நாட்டு சந்தைக்கான அடைவானது, ஏதேனும் வாகன எரிபொருள்கள், திரவ பெட்ரோலிய எரிவாயு, புரோபேன், பியூட்டேன் மற்றும் உரம் போன்ற பண்டங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஏனைய பிற பண்டங்களைப் பொறுத்த வரையில் நிதி என்ற விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் விதிப்புரையின் பேரில் அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டு அங்கீகரிக்கப்படலாம். மேற்கூறிய சலுகையின் கீழ் உள்நாட்டு சந்தையில் நுளைகின்ற ஏதேனும் தொழில் முயற்சியொன்று அனைத்து வகையான வரிகள்/அத்தகைய பண்டங்களின் மீதான தீர்வைகள், உள்நாட்டு சந்தைக்கு வழங்கப்பட்ட அத்தகைய பண்டங்களின் அளவிற்கு அமைய செலுத்துதல்வேண்டும். குறித்த தொழில் முயற்சியானது, 2017 ஆம் அண்டின் 24 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய, வருமானத்தின் மீது வருமான வரி மற்றும் ஏற்புடையதான ஏனைய அறவீடுகள் என்பனவற்றினை செலுத்துதல்வேண்டும்.

ஏதேனும் ஆண்டொன்றில் உள்நாட்டு சந்தைக்கான விற்பனைப் பெறுமதியுடன் அதே ஆண்டின் அதன் ஏற்றுமதிப் புரள்வின் பெறுமதியினை வருடாந்த அடிப்படையில் கணக்கு இணங்கச் செய்யத் ( Accounts Reconciliation) தவறும் தொழில் முயற்சியொன்று, அத்தகைய தொழில் முயற்சியின் முதலாவது வர்த்தக விற்பனைத் தேதியிலிருந்து கணக்கிடப்பட்டு முதல் (04) வருட காலப் பகுதியினுள் அத்தகைய கணக்கிணக்கம் செய்யப்படாத உள்நாட்டு விற்பனையின் பெறுமதியினை வருடாந்தம் முன் கொண்டுசெல்வதற்கு அனுமதிக்கப்படும். அதன் பின்னர், அத்தகைய தொழில் முயற்சிக்கு உள்நாட்டு விற்பனை ஏதுமிருப்பின், அதன் உள்நாட்டு சந்தைக்கான விற்பனை அளவு அத்தொழில் முயற்சியினால் முதல் நான்கு ஆண்டுகளில் கணக்கிணக்கம் செய்யப்படாத அளவிற்கேற்ப குறைக்கப்படும்.

எவ்வாறாயினும்:

(i) மீள் ஏற்றுமதிக்கான பண்டங்கள் அல்லது வியாபாரப் பண்டங்களில் பௌதீக ரீதியிலான இறக்குமதியில் ஈடுபட்டுள்ள மேலே (அ) மற்றும் (உ) பிரிவின் கீழ் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் புதிய தொழில் முயற்சியொன்று, அதன் வியாபாரச் செயற்பாடுகளை சுதந்திரத் துறைமுகமொன்றில் அல்லது பிணைக்குத இடப்பரப்பிற்குள் இயக்குதல் வேண்டும். இருப்பினும், துறைமுக நுளைவு வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள தொழில் முயற்சியானது,முதன்மைச் சட்டவாக்கத்தில் வரையறுக்கப்பட்டுள்ளவாறு இந்த ஒழுங்குவிதியின் கீழ் பண்ட உற்பத்திக்காக அனுமதியைப்பெறுள்ள அத்தகைய தொழில் முயற்சியானது, ஒன்றில் சுதந்திரத் துறைமுகமொன்றில் அல்லது குறிப்பீடு செய்யப்பட்ட பிணையக்குத இடப்பரப்பிற்குள் செயற்படுத்தப்படுதல் வேண்டும்.

(ii) மேலே (ஆ), (இ)மற்றும் (ஈ) பிரிவுகளின் கீழ் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாரான ஏதேனும் புதிய தொழில் முயற்சியொன்று, சுதந்திரத் துறைமுகம் அல்லது பிணையக் குதப் பரப்பிற்கு வெளியே தமது வியாபாரச் செயற்பாடுகளை நிறைவேற்றலாம்.

(iii) வியாபாரச் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள மேலே (அ) பிரிவின் கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட, ஏதேனும் புதிய தொழில் முயற்சியொன்றின் ஆகக் குறைந்த முதலீடானது, ஐ.அ.டொ.05 மில்லியனாக இருத்தல் வேண்டுமென்பதுடன், அம்முதலீட்டின் ஆகக் குறைந்தது ஐம்பது சதவீதத்தினை (50%) நிலையான சொத்துக்களில் முதலீடுசெய்யப்பட்டிருப்பது அவசியமாகும் என்பதுடன், அத்தகைய தொழில் முயற்சிக்கும் சபைக்குமிடையில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைத் திகதியிலிருந்து பன்னிரெண்டு (12) மாத காலத்திற்குள் மொத்த முதலீட்டினை பூரணமாக முதலீடுசெய்திருத்தல்வேண்டும். குறித்த தொழில் முயற்சியானது, தனது வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்த திகதியிலிருந்து ஐந்து(05) வருட காலத்தினுள் அதன் வருடாந்த மீள் ஏற்றுமதிப் புரள்வினை அல்லது ஏற்றுமதிப் புரள்வினை, எதுவாயிருப்பினும், ஐ.அ.டொ.20 மில்லியனுக்கு குறையாத வகையில் அடையப்பெறுவது அவசியமாகும்.

(iv) வியாபாரச் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள மேலே (உ) பிரிவின் கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட, ஏதேனும் புதிய தொழில் முயற்சியொன்றின் ஆகக் குறைந்த முதலீடானது ஐ.அ.டொ.03 மில்லியனாக இருத்தல் வேண்டுமென்பதுடன், அம்முதலீட்டின் ஆகக் குறைந்தது முப்பது சதவீதத்தினை (30%) நிலையான சொத்துக்களில் முதலீடுசெய்யப்பட்டிருப்பது அவசியமாகும் என்பதுடன், அத்தகைய தொழில் முயற்சிக்கும் சபைக்குமிடையில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைத் திகதியிலிருந்து பன்னிரெண்டு (12) மாத காலத்திற்குள் மொத்த முதலீட்டினை பூரணமாக முதலீடுசெய்திருத்தல்வேண்டும். குறித்த தொழில் முயற்சியானது தனது வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்த திகதியிலிருந்து ஐந்து (05) வருட காலத்தினுள் அதன் வருடாந்த மீள் ஏற்றுமதிப் புரள்வினை அல்லது ஏற்றுமதிப் புரள்வினை, எதுவாயிருப்பினும், ஐ.அ.டொ.15 மில்லியனுக்கு குறையாத வகையில் அடையப்பெறுவது அவசியமாகும்.

(v) வியாபாரச் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள மேலே (ஆ), (இ) மற்றும் (ஈ) பிரிவுகளின் கீழ் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள ஏதேனும் புதிய தொழில்முயற்சி ஒன்றின் ஆகக் குறைந்த முதலீடானது ஐ.அ.டொ.01 மில்லியனாக இருத்தல் வேண்டுமென்பதுடன், அம்முதலீட்டின் ஆகக் குறைந்தது நாற்பது சதவீதத்தினை (40%) நிலையான சொத்துக்களில் முதலீடு செய்யப்பட்டிருப்பது அவசியமாகும் என்பதுடன், அத்தகைய தொழில் முயற்சிக்கும் சபைக்குமிடையில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை திகதியிலிருந்து பன்னிரெண்டு (12) மாத காலத்திற்குள் மொத்த முதலீட்டினை பூரணமாக முதலீடுசெய்திருத்தல் வேண்டும். குறித்த தொழில் முயற்சியானது தனது வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்த திகதியிலிருந்து ஐந்து (05) வருட காலத்தினுள் அதன் வருடாந்த மீள் ஏற்றுமதிப் புரள்வினை அல்லது ஏற்றுமதிப் புரள்வு, எதுவாயிருப்பினும், ஐ.அ.டொ.10 மில்லியனுக்கு குறையாத வகையில் அடையப்பெறுவது அவசியமாகும்.

(vi) இந்த ஒழுங்குவிதிகளின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட, ஏதேனும் தொழில் முயற்சியென்றினால் மீள் - ஏற்றுமதி நோக்கில் கொண்டு வரப்பட்ட ஏதேனும் பண்டங்கள் / உற்பத்திகள் அத்தகைய பண்டங்கள் / உற்பத்திகள் இறக்குமதி செய்யப்பட்ட / வந்தடைந்த நாளிலிருந்து பதினெட்டு (18) மாதங்களுக்கு மேலாக களஞ்சியப்படுத்திவைப்பதற்கு அல்லது தேக்கிவைப்பதற்குக் கூடாது. அத்தகைய ஏதேனும் பண்டங்களை / உற்பத்திகளை பதினெட்டு (18) மாதங்களுக்கு மேலாக ஏதேனும் தொழில் முயற்சியொன்று களஞ்சியப்படுத்திவைத்திருப்பின் அல்லது தேக்கிவைத்திருப்பின், சபையானது சுங்கத் திணைக்களத்துடன் கலந்தாலோசித்து சுங்க கட்டளைச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு

அமைவாக பதினெட்டு (18) மாதங்கள் நிறைவடைந்த நாளிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் மீள்- ஏற்றுமதிசெய்யுமாறு அத்தகைய தொழில் முயற்சிக்கு கட்டளையிடுதல் வேண்டும்.

3. மேலே 2(1), (ஆ), (இ), (ஈ) மற்றும் (உ) பந்திகளின் கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள புதிய தொழில் முயற்சியொன்று சபையினால் விதந்துரைக்கப்பட்ட படிவங்களில் அதன் அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களினதும் விபரமான பதிவுகளை தெளிவாகப் பேணுதல்வேண்டும். இவற்றுள் வெளிநாட்டுச் செலாவணி உள்வருகை மற்றும் வெளிச்செல்கை அனைத்தினதும் விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதுடன் அத்தகைய பதிவுகள் வருடந்தோறும் சபைக்கும் இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணிப் பணிப்பாளருக்கும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். மேலும், அத்தகைய பதிவுகள் கடந்த ஆறு வருடங்கள் தொடர்பான தரவுகளும் சபை அல்லது இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணிப் பணிப்பாளரினால் கோரப்படும் போது இலகுவாகச் சமர்ப்பிப்பதற்கு வசதியான வகையில் தொழில்முயற்சியாண்மையின் தொழிற்பாட்டு வளாகத்திற்குள் பேணப்படுதல் வேண்டும்.

4. மேலே 2(1), (அ), (ஆ), (இ), (ஈ) மற்றும் (உ) பந்திகளின் கீழ் குறிப்பீடு செய்யப்பட்ட வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள புதிய தொழில் முயற்சியொன்று, சுங்கத் திணைக்களம், இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபை என்பவற்றினால் சுதந்திர துறைமுகம் அல்லது பிணையகுதப் பரப்பு அல்லது குறிப்பீடுசெய்யப்பட்ட பிணையகுதப் பரப்பு தொடர்பாக அறிமுகப்படுத்தப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட தொழிற்பாட்டு நடைமுறைகளுக்கு உட்படுதல் வேண்டும்.

5. சுதந்திர துறைமுகம் அல்லது பிணையகுத இடப்பரப்பிற்க்கும் அதிலிருந்தும் இலங்கை ஆட்புல எல்லைக்கு அல்லது அதிலிருந்து பண்டங்களின் அசைவானது ஏற்புடையவாறான சுங்கக் கட்டளைச் சட்டம் மற்றும் இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு உட்படுதல் வேண்டும் என்பதுடன் அப்பண்டங்கள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டிருப்பின் அல்லது இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டிருப்பின் அதற்கு ஏற்றவாறு அமைதல் வேண்டும்.

6. மேலே 2 (1) (அ), (ஆ), (இ ), (ஈ) மற்றும் (உ) இல் குறிப்பிடப்பட்டுள்ள வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஏதேனும் தொழில் முயற்சியொன்றுக்கு ஏதேனும் பொருட்களை வழங்கல் செய்வதானது, பெறுமதிசேர் வரி அல்லது நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி என்பனவற்றின் நோக்கத்திற்காக இந்த விதிமுறைகளின் கீழ் ஏற்றுமதியாக கருதப்படும்.

7. துறைமுக நுழைவோடு சம்பந்தப்பட்ட ஏதேனும் தொழில் முயற்சியொன்றுடன் / அல்லது ஏதேனும் மீள்-ஏற்றுமதி வியாபாரம் / செயற்பாடுகள் அல்லது கப்பலேற்றுதல் சம்பந்தப்பட்ட பின்வரும் விநியோக ஏற்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட,

(அ) மிளகு, பாக்கு, சாதிக்காய் / சாதிப்பத்திரி, புளியம்பழம், கறுவா, கராம்பு, இஞ்சி, மஞ்சள் மற்றும் ஏலக்காய் போன்ற வாசனைப் பொருட்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள்.

(ஆ) கழிவு மற்றும்/அல்லது வள மீள்சுழற்சி வியாபாரம் அல்லது கழிவுகளை பதனிடுதல் என்பனவற்றிற்காக

இந்த விதிகளின் கீழ் அங்கீகாரம் வழங்கப்படமாட்டாது.

8. இங்கு குறிப்பிடப்பட்ட நியதிகளுக்கு அமைவாக விலக்களிப்புக்கள் வழங்கப்பட்ட போதிலும் இவ்வொழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட தொழில் முயற்சிகள் சுங்கக் கட்டளைச் சட்டத்தின் அட்டவணை (ஆ)வில் விதந்துரைக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்கும் தடைகளுக்கும் உட்பட்டிருத்தல் வேண்டும். இந்த வகையில், சுங்கக் கட்டளைச் சட்டத்தின் அட்டவணை (ஆ) இல் குறிப்பீடு செய்யப்பட்ட தடைகள் அல்லது கட்டுப்பாடுகளுக்கு முரணாக ஏதேனும் அத்தகைய தொழில் முயற்சி செயற்படுகின்ற சந்தர்ப்பத்தில் சுங்கப் பணிப்பாளர் நாயகம் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் ஒருவரினால் எழுத்து மூலம் இத்தகைய ஒழுங்குவிதிகளுடன் ஏற்புடையதான ஏதேனும் வியாபாரத்தளங்களுக்குள் பிரவேசிப்பதற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

9. எவ்வாறாயினும், 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலவாணிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அதே சட்டத்தின் 29 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆம் திகதிய 2045/56 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் அட்டவணை (1) அ(4) பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட 'வரையறைகள்" அவ்வாறான தொழில் முயற்சியொன்றிற்கு ஏற்புடையதாகாதல் வேண்டும் என்பதுடன் அதேவேளை வெளிநாட்டுச் சொத்துரிமை அத்தகைய தொழில் முயற்சிக்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

10. இந்த ஒழுங்குவிதிகளில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் தொழில் முயற்சிக்கு இந்த ஒழுங்குவிதிகளின் கீழ் பிணைக்குத இடப்பரப்பு அல்லது சுதந்திர துறைமுக இடப்பரப்பில் உள்நாட்டு ஏற்றுமதிகளின் நுழைவு தொடர்பில் மாத்திரம் வாணிபத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட "உற்பத்தி நாடு பற்றிய சான்றிதழ்" (Country of Origin Certificate) ஏற்புடையதாக இருக்கும்.

11. திருத்தப்பட்டவாறான, 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க இலங்கை அதிகாரசபைச் சட்டத்தின் 2(iii) ஆம் பிரிவின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டைத் துறைமுககங்கள் இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக சுதந்திர துறைமுகங்களாக இத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

12. திருத்தப்பட்டவாறான,1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க முதலீட்டுச் சபைச் சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட கட்டுநாயக்க ஏற்றுமதிச் செயன்முறை வலயம், கொக்கலை ஏற்றுமதிச் செயன்முறை வலயம் என்பன இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக பிணைய குத இடப்பரப்புக்களாக இத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

13. 1955 ஆம் ஆண்டின் விமானச் சேவை ஒழுங்குவிதியின் கீழ் 2013 பெப்ரவரி 01 ஆந் திகதிய 1795/52 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 126 ஆவது ஒழுங்குவிதியின் கீழான அறிவித்தலில் பிரகடனப்படுத்தப்பட்ட மத்தளையில் அமைந்துள்ள மத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையமும் சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 235) III ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படட்ட 2013 மார்ச் 07 ஆந் திகதிய 1800/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட எல்லைகளும், 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க முதலீட்டுச் சபைச் சட்டத்தில் பிரகடனப்படுத்தப்பட்ட மிரிச்சவிலை ஏற்றுமதிச் செயன்முறை வலயம் என்பன துறைமக நுளைவுச்செயற்பாடு என்ற வகையில் முதன்மைச் சட்டத்தில்

வரையறுக்கப்பட்டவாறு பெறுமதிசேர்க்கப்பட்ட தயாரிப்புச் செயற்பாடுகளின் நோக்கங்களுக்காகக் குறிப்பீடு செய்யப்பட்ட விசேட பிணையகுத இடப்பரப்புக்களாக இத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

14. இத்தகைய ஒழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக கட்டுநாயக்காவில் அமைந்துள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையமானது பிணைக்குதப் பகுதியாக இத்தால் பிரகடப்படுத்தியுள்ளது.

15. 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, வர்த்தக மைய ஒழுங்குவிதிகளுடன் இணைந்த வகையில் திறைசேரி செயலாளரினால் இத்தகைய ஒழுங்கு விதிகளின் கீழ் வெளியிடப்பட்ட ஏதேனும் கடிதம் (கள்) அல்லது அறிவுறுத்தல்கள் இருப்பின், மேலே குறிப்பிடப்பட்ட, 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வர்த்தக மைய ஒழுங்கு விதிகள் சட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட எந்வொறு தீர்மானத்திற்கும் பாதிப்பு எற்படாத வகையில், 2019 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, வர்த்தக மைய ஒழுங்குவிதிகள் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து பயன்வலுப்பெறத்தக்க வகையில் இத்தால் இரத்துச்செய்யப்படுகிறது.